# NELIKOLU CHARITABLE TRUST

# நெலிகோலு அறக்கட்டளை

Kekkatty, Ellanhalli, Post, The Nilgiris- 643243
305, Linghi Chetty St., 3rd Floor, Chennai-600001 Ph. 0423-2517174

## படகர் நாள்காட்டி

## அய்யந ௦பருச -1941 (2019)

## கூடலு JAN-FEB



Photo Courtesy: *Raghu Joghee*

| சோவார MONDAY | மங்கவார TUESDAY | ௦பொதவார WEDNESDAY | சிக்குவார THURSDAY | ௦பெள்ளி FRIDAY | சநி SATURDAY | ஆதிவார SUNDAY |
|---|---|---|---|---|---|---|
| 1 7(JAN) | 2 8 | 3 9 | 4 10 | 5 11 | 6 12 | 7 13 |
| 8 14 | 9 15 | 10 16 | 11 17 | 12 18 | 13 19 | 14 20 |
| ○ 15 21 | 16 22 | 17 23 | 18 24 | 19 25 | 20 26 | 21 27 |
| 22 28 | 23 29 | 24 30 | 25 31 | 26 1(FEB) | 27 2 | 28 3 |
| ● 29 4 | | | | | | |

### பிரம்ம முகூர்த்தம்

ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள். 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளை முப்பது முகூர்த்தங்களாகப் பிரிக்கின்றனர். ஒரு முகூர்த்தம் இரண்டு நாழிகைகளைக் கொண்டது. ஒரு நாழிகை 24 நிமிட கால எல்லையைக் கொண்டது. காலை 6 மணி தொடங்கி இந்த முகூர்த்தங்கள் கணக்கிடப்படுகின்றன. முப்பது முகூர்த்தங்களுள் 29ஆவது முகூர்த்தம் பிரம்ம முகூர்த்தம். விடிய காலை 4.24 மணிக்குத் தொடங்கி விடிய காலை 5.12 மணி வரையான நேரமே பிரம்ம முகூர்த்தக் காலம். அனைத்து நல்ல காரியங்களுக்கும் பிரம்ம முகூர்த்த நேரம் உகந்தது நம் முன்னோர் மதுவெ (திருமணம்), மநெ கிச்சு ஒட்டோது (புகுமனைப் புகுவிழா), மடக்கெ முட்டுவது (பூப்பு நீராட்டு) போன்றவற்றைப் பிரம்ம முகூர்த்த நேரத்திலேயே நடத்தியுள்ளனர். ௦பித்திக்குவ அ௦ப்௦பாவில் முதல்விதைப்பு பிரம்ம முகூர்த்தத்திலேயே நடத்தி வருவது நினைவு கூரத்தக்கது.

### ௦படகரு மதுவெக ஜெந

ஊ ஜெநதோகெ (வளர்பிறையில்) மதுவெ ௦பீப்பது.
சோவார மதுவெக சரியாந ஒள்ளிய ஜெந (சோவார சோமிய ஜெந).
எரடாவதாகி ௦பொதவார ஒள்ளிய ஜெந.
சிக்குவார நோகெயு மதுவெ மாடாக்கு.
இவெ மூருக இந்தாடுத்தா ஆதிவார.
௦பெள்ளியோகெ மநெய ௦புட்டு எண்ண கடசுவது இல்லெ;
அதுநெந்த ௦பெள்ளியோ மதுவெ இல்லெ
சநியோகெயோ, மங்கவாரநோகெயோ மதுவெ ௦பீப்பது இல்லெ.

### பழமொழி




"படகுமொழிப் பழமொழிகள்" (2003) என்னும் தலைப்பில் அமைந்த நெலிகோலு அறக்கட்டளையின் முதல் புத்தகம் பல சிறப்புகளைக் கொண்டது. இதில் 1008 படகுப் பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. இவை அகரவரிசைப் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் படகுப் பழமொழிகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழி எழுத்துகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துகளுக்கு வேண்டிய இடங்களில் குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் படகுப் பழமொழிகளின் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே படகுப் பழமொழிக்கு இணையாக இருக்கும் தமிழ், ஆங்கிலப் பழமொழிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் பழமொழிகள் சமுதாயத்தில் இடம்பெற்றுள்ள இடத்தினை விளக்கும் வகையில் விளக்கமான ஒரு பின்னிணைப்புடன் இந்நூல் சிறப்புடன் விளங்குகிறது.